பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 25 திங்கட்கிழமை 09.05.2022 கதிர் 78

# ஜனாதிபதி கண்டனம்!



கொழும்பு - காலி முகத்திடலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆதரவாளர்கள் இன்று நடத்திய தாக்குதல் ☞2

# 'மைனா கோ கம' தீ வைத்து எரிப்பு!

## - இரும்புக் கம்பிகளுடன் மஹிந்தவின் ஆதரவாளர்கள் அட்டகாசம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைப் பதவி விலகக் கோரி போராட்டம் நடத்துபவர்களால் அலரி மாளிகைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த 'மைனா கோ கம' கூடாரங்கள் மீது ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆதரவாளர்கள் இன்று தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் அங்கு பதற்றமான நிலைமை ஏற்பட்டது. ☞2





# கடைசியில் மஹிந்தர் ராஜினாமா



கொழும்பு,மே09 பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அலரிமாளிகை இல்லத்திலிருந்து இன்று முற்பகல் புறப்பட்டகாடையர் கூட்டம் கொழும் பில் நடத்திய ரணகள அட்டூழியங்களின் பின்னர் பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ

# 'கோட்டா கோ கம'வும் அடித்துடைத்து எரிப்பு

## மஹிந்த அணியினர் நடத்திய வெறியாட்டத்தில் 19 பேர் காயம்

அலரி மாளிகைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த 'மைனா கோ கம'வை உடைத்துத் தகர்த்து எரியூட்டிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின்



# நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்

உடன் அமுலாகும் வகையில் நாடு முழுவதும் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள காலப்பகுதியினுள், மக்கள் ஒன்று கூடல்களை மேற்கொண்டு, வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு ☞2

# மருத்துவத் துறையினர் இன்று யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு



அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பாரிய கவனவீர்ப்பு போராட்டமொன்று யாழ்ப்பாணத்தில் இன்றையதினம் இடம்பெற்றது.

அடக்குமுறை ஊடாக தேசிய கொள்கைகளை அழித்து அக்கிரமத்தில் ஆட்சி செய்கின்ற அரசே மக்கள் அபிப்பிராயத்துக்கு தலைவணங்கு எனக்கோரி ☞2

# அவசரகாலச் சட்டத்தை உடனடியாக நீக்குங்கள்

## அரசிடம் மருத்துவ சங்கம் கோரிக்கை

நாட்டில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம், அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவதனூடாக அமைதியான முறையில் போராட்டத்தை மேற்கொள்வோர் வன்முறையில் ஈடுபடுவதற்கு வழிவகுக்கும் என இலங்கை மருத்து ☞2

# அத்தியாவசிய சேவைகள் மட்டுமே யாழ் போதனா வைத்தியசாலையில்

## மிகுதி எல்லாம் நிறுத்தம்

யாழ் போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த அனைத்து சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன என யாழ் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்தார் ☞2

# விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி யாழ் ஆஸ்பத்திரியில் இல்லை!

## நாய்க்கடிக்குள்ளாகுவோருக்கு ஆபத்து

விலங்குவிசர்நோய்த் தடுப்பூசி மருந்துகளான ஏ.ஆர்.வி. மற்றும் ஏ.ஆர்.எஸ். ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## அத்தியாவசிய சேவைகள்.....

யாழ்போதனாவைத்தியசாலையின் தற்போதைய நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

யாழ் போதனா வைத்தியசாலையைப் பொறுத்தவரை நோயாளர்களின் சிகிச்சைக்குரிய மருந்து மற்றும் சத்திர சிகிச்சைக்குத் தேவையான உபகரணங்களுக்கும் மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்பொழுது யாழ் போதனா வைத்தியசாலையில் அத்தியாவசியமாகத் தேவையான சத்திரசிகிச்சைகள் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றது

ஏனைய சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன் விசர்நாய்க் கடிக்கான மருந்து தட்டுப்பாடாக இருக்கிறது. எனவே பொதுமக்கள் கவனமாக இருக்க வேண்டும். மிருகங்களிடம் கடிபடுவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஏனெனில் விசர் நாய்க்கடி மருந்து என்பது ஒரு விலை உயர்ந்த மருந்தாகும். அதற்குத்தட்டுப்பாடுஏற்பட்டுள்ளது. பொதுமக்கள் மிக கவனமாக இருக்க வேண்டும். அத்துடன் விபத்துக்கள் மற்றும் தேவையற்ற பிரச்சினைகள் மூலம் வைத்தியசாலைக்கு வருவதைத் தவிர்க்குமாறும் கோருகின்றோம்.

போதுமான அளவு சேவையினை வழங்க முடியாதுள்ளது என்பதை மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். சுகாதார கட்டமைப்புகள் சீர்குலைந்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். எனவே பொதுமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியம். - எனவும் தெரிவித்தார்

## மருத்துவத்துறை.........

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை முன்பாக இன்று காலை 9 மணியளவில் ஒன்றுகூடிய வைத்தியர்கள், பணியாளர்கள், ஊழியர்களே இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமாகாணத்திலுள்ள சகல அரச வைத்தியசாலைகளிலும் உள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் இந்த கவனவீர்ப்பு போராட்டத்தில் பங்கேற்றனர்.

## அவசரகால சட்டத்தை .......

சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் எதிர்ப்புக்குச் செவிசாய்த்து பிரச்சினைக்கு உடனடி தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மருத்துவ சங்கம், அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசின் இந்த நடவடிக்கையானது, தற்போதைய ஸ்திரமற்ற நிலையை மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும், சாதாரண குடிமக்களின் நல்வாழ்வுக்கு தீங்கு விளைவிப்பதுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் இலங்கை மருத்துவ சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

## கடசியில்.....

விலகிக் கொள்வது தொடர்பான கடிதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்வுக்கு இன்று பிற்பகல் அனுப்பப்பட்டு இருக்கின்றது.

இன்று மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியிலிருந்து இறங்குவார் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. இன்று காலையில் அவரது இல்லத்திலிருந்து புறப்பட்ட கூட்டம் நடத்திய வெறியாட்டக் களேபரங்கள் அவரது அரசியல் வாழ்வில் நிரந்தரக் கரும்புள்ளியாக பதிந்த நிலையில், அவர் பதவியில் இருந்து விலகி இருக்கிறார்.

தமக்குச் சார்பாக மக்கள் மத்தியில் இருந்த அனுதாபம், பச்சாதாபம் சகலதையும் ஒரே நாளில் அடியோடு இழந்த பின்புலத்தில் அவர் பதவியில் இருந்து விலகி செல்கின்றார் என அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பிரதமர் பதவி விலகியமையால் முழு அமைச்சரவையும் கலைந்ததாகக் கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

## மைனா கோ கம......

அட்டாகாசத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கூடாரங்களைப் பிய்த்து எறிந்து, தீமூட்டிக் கொளுத்தியுள்ளனர். இதனால், அப்பகுதி எங்கும் கரும்புகையால் மூடப்பட்டது.

இன்று அலரி மாளிகைக்கு நேரில் வந்து பிரதமர் மஹிந்த ராஜபக்சவை நேரில் சந்தித்த ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆதரவாளர்கள், மஹிந்தவைப் பதவி விலக வேண்டாம் எனக் கோரினர். அதன்பின்னர் அலரி மாளிகைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருந்த 'மைனா கோ கம'வுக்கு வந்த அவர்கள், இரும்புக் கம்பிகள் மற்றும் குண்டாந்தடிகளை ஏந்தியவாறு ரகளையில் ஈடுபட்டு, அடாவடித்தனங்களைக் காண்பித்தனர். அக்குழுவைச் சேர்ந்த இன்னும் சிலர், தேசியக் கொடிகளை ஏந்தியவாறு மஹிந்தவுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

## ஜனாதிபதி கண்டனம் .......

சம்பவத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

ருவிட்டர் பதிவொன்றை வெளியிட்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## விலங்கு விசர் .......

என்பவை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாய்களைக் கண்டால் விலகிச் செலலுங்கள். நாய்க்கடிக்கு உள்ளாகினால் விலங்கு விசர் நோய் தடுப்பூசி மருந்து தட்டுப்பாட்டினால் உயிர்களைக் காப்பாற்ற முடியாது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாய்க்கடிக்கு உள்ளாகியவர்களுக்கு ஏ.ஆர்.வி. மற்றும் ஏ.ஆர்.எஸ். தடுப்பூசி மருந்துகள் வழங்கப்படாவிடின் நீர்வெறுப்பு நோய்க்கு உள்ளாகி உயிரிழப்பு ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## நடு முழுவதும் .......

பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலிமுகத்திடல் உட்பட நாட்டின் பல பாகங்களில் வன்முறைச் சம்பவங்கள் பதிவானதையடுத்து இவ்வாறு நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

## 'கோட்டா கோ கம' .......

ஆதரவாளர்கள், காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த 'கோட்டா கோ கம' பகுதிக்குள் புகுந்து அங்கிருந்த கூடாரங்களையும் அடித்துடைத்து எரித்து நாசப்படுத்தினர்.

கலகக்காரர்களை அடக்கப் பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகத்தையும், கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சையும் மேற்கொண்டனர். இதனால் காலிமுகத்திடலில் பெரும் பதற்றம் நிலவுகின்றது.

'கோட்டா கோ கம'வில் அமைதியான முறையில் போராட்டம் நடத்தியவர்கள் மீது மஹிந்தவின் ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் காயமடைந்த 140 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இன்று முற்பகல் வேளையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலகுகின்றார் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அலரி மாளிகையில் ஒன்றுகூடிய ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆதரவாளர்கள், பிரதமரைப் பதவி விலக வேண்டாம் எனக் கோரிக்கை விடுத்துவிட்டு, 'மைனா கோ கம' மீது தாக்குதல் நடத்தி கூடாரங்களை அடித்து உடைத்து எரித்து நாசப்படுத்தினர். இதையடுத்தே 'கோட்டா கோ கம'வில் அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களையும் எரித்து நாசப்படுத்தினர்.

# அரசுடன் தொடர்புடைய வெறியர்களே காரணம் என்கிறார் சஜித் பிரேமதாஸ

## ராஜபக்ஷக்களே இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்கிறார்

அலரி மாளிகையின் முன்னால் மற்றும் ஜனாதிபதி செயலாகத்திற்கு முன்னால் ஜனநாயகத்தை மற்றும் சிறந்த நாட்டை கட்டியெழுப்புவதை தமது பிரார்த்தனையாக கொண்டு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அரசுடன் தொடர்புடைய வெறி பிடித்த தீவிரவாத கும்பலினால் மேற்கொள்ளப்பட்ட கோழைத்தனமான வன்முறை தாக்குதலை வன்மையாக கண்டிப்பதாகவும் அத்தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் சட்டத்துக்கு முன் நிறுத்தப்பட்டு உரிய கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஒரு மாத காலத்திற்கு மேலாக அகிம்சை வழியில் மிக கண்ணியமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களினால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சட்டத்தை மீறும் வகையில் அல்லது பண்பாடற்ற முறையில் எந்தவிதமான நடவடிக்கைகளும் பதியப்படவில்லை என்பதோடு, அவர்கள் வன்முறைக்குப் பதிலாக அகிம்சையையே கைகொண்டார்கள்.

அவ்வாறான அகிம்சைப் போராளிகள்மீதுஅரசுஎல்லாச்சந்தர்ப்பங்களிலும் தமது தீவிரவாத பாணியிலான அடக்குமுறையையும், அச்சுறுத்தல்களையுமே மேற்கொண்டு வந்தது.

தன்னுடைய ஆதரவாளர்கள் மற்றும் அதிகார பலத்தால் வெறிகொண்டுள்ள கூட்டம் ஆட்சி செய்வதாகவும், அழுக்குப்படிந்து துர்நாற்றம் வீசக்கூடிய அரசை தாம் எச்சரிப்பதாக கூறிய

எதிர்க்கட்சித் தலைவர், இந்த மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு ஜனாதிபதி ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ராஜபக்ஷ உள்ளடங்களாக அனைவரும் தொடர்புபடுகின்றனர் எனவும் இந்தத் தீவிரவாத பாணியிலான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இன்று பிற்கபல் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இன்னும் தூரம் அதிகம்

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை அடியோடு ஒழிக்கும் நோக்குடன் ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் அதன் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார அரசமைப்புக்கு 20ஆவது திருத்தமாக சமர்ப்பித்த சட்ட முன்வடிவு வர்த்தமானியில் பிரசுரமாகிவிட்டது.

இது முக்கிய நகர்வாக பார்க்கப்பட்டாலும், உண்மையில் இந்த விடயத்தில் இந்த முன்னேற்றம் அரைக்கால்வாசி கிணறு தாண்டிய அளவு கூட இல்லை என்பது தான் உண்மை.

இது என்னவோ நாடாளுமன்றத்தின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினால் சமர்ப்பிக்கப்பட்டது என்றாலும், நாடாளுமன்ற முறைமைகளின்படி வெறும் தனிநபர் சட்ட மூலம் தான். தனிநபர் பிரேரணைதான். அரசு அல்லாத தனிநபர் பிரேரணைக்கு வழங்கப்படும் கவனிப்பு தான் இதற்கும் கிட்டும் என்பதால் இந்த முயற்சியின் மூலம் விடயம் ஒப்பேறுவதற்கு இன்னமும் 99 வீதமான நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளன என்பதே யதார்த்தம். அவை பூர்த்தியாவதற்கு நீண்ட காலம் பிடிக்கும் என்பதுதான் நிலைமை.

வழமையாக இத்தகைய தனிநபர் பிரேரணைகள் சட்டமா அதிபர் திணைக்களத்தின் கவனிப்பை தாண்டி வருவதற்கு ஆறு வார காலம் எடுக்கும். இப்போது கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சட்ட மா அதிபரையும் வைத்துக்கொண்டு பரிமாறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் அந்தச் சட்ட மூலம் ஓரிரு வாரங்களிலேயே வர்த்தமானிக்கு வந்துவிட்டது.

இனிமேல் இந்தப் பிரேரணையை சமர்ப்பித்த ரஞ்சித் மத்துமபண்டார அதை நாடாளுமன்றத்தின் முதலாவது வாசிப்புக்காக சமர்ப்பிக்க வேண்டும்.

அது முதலாவது வாசிப்புக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட காலத்திலிருந்து ஒரு வார காலத்துக்குள் யாரேனும் தரப்புக்கள் அந்த சட்டமூலத்தின் செல்லுபடி தன்மை, அது நிறைவேற்றப்பட வேண்டிய முறைமையின் போக்கு ஆகியவை தொடர்பில் சட்டச் சவாலுக்கு உட்படுத்தும் விதத்தில் உயர்நீதிமன்றத்தில் மனு செய்யலாம். அத்தகைய மனுக்களின் அடிப்படையில் உயர் நீதிமன்றம் இந்தச் சட்டமூலம் குறித்து விசாரித்து தனது பரிந்துரையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும். அதற்கு மேலும் இரண்டு வாரங்கள் செல்லலாம்.

அதன் பின்னர் இது தனிநபர் சட்டமூலம் என்பதால் சம்பந்தப்பட்ட அமைச்சின் அல்லது அமைச்சுகளின் பரிந்துரை மற்றும் கவனிப்புக்கு அது அனுப்பப்படும். அவற்றின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அதிலிருந்து ஆறு மாதங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கு உண்டு. ஆறு மாத காலத்தில் ஏதேனும் திருத்தங்கள், மாற்றங்களுக்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அந்த மூல வடிவத்தில் சட்டமூலம் இரண்டாம் வாசிப்புக்கு நாடாளுமன்றத்துக்கு வரும்.

அதாவது அரசு விரும்பினால் 6 மாத காலத்திற்கு இந்தச் சட்டமூலத்தைக் கணக்கெடுக்காமல் கிடப்பில் போடத் தாராளமாக இடம் உண்டு.

போதாக்குறைக்கு இது நாட்டின் ஆட்சி முறைமையையே மாற்றும் ஓர் அரசமைப்பு திருத்தம் என்பதால் நிச்சயம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவுடன் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களின் அனுமதி பெறப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் எனக் கூறப்படுகிறது.

ஆக, அவற்றையெல்லாம் தாண்டி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்கும் இந்த சட்டமூலம் நடைமுறைக்கு வருவது என்பது மணலைக் கயிறாகத் திரிக்கும் வேலைதான்.

முயற்சியை ஆரம்பித்து முன்னெடுப்பது எதிரணியின் கடமை. அது வெற்றியடைந்து மக்களுக்கு சார்பான நிலைமை உருவாவது நாட்டின் தலையெழுத்து. இரண்டும் நல்ல திசையில் நகர்ந்தால் நாட்டுக்கும் நல்லது; மக்களுக்கும் நல்லது.

## எரிவாயுவைக் கொள்வனவு செய்ய வரிசையில் காத்திருக்க வேண்டாம்

எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கு வரிசையில் காத்திருக்க வேண்டாம் என லிற்றோ நிறுவனத்தின் தலைவர் நுகர்வோர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எரிவாயு கையிருப்பு கிடைக்கும் வரை நுகர்வோரின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால், தற்போது தொழிற்சாலைகளுக்கு மட்டுமே எரிவாயு வழங்கப்படுகிறது என அவர் கூறினார்.

இதேவேளை, எரிவாயு இறக்குமதிக்காக 70 லட்சம் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட்டுள்ளன எனவும், எதிர்வரும் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இரண்டு எரிவாயு கப்பல்கள் வரவுள்ளன என லிற்றோ தலைவர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

## பால்மாவின் விலை மீண்டும் அதிகரிப்பு

இறக்குமதி செய்யப்படும் பால்மா விலைகள் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு கிலோகிராம் பால் மா 2 ஆயிரத்து545 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட போதிலும் தற்போது 600 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் 400 கிராம் பால் மாவின் விலை 1,020 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட போதிலும் தற்போது 230 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த கடவுச்சீட்டு விநியோகம் ஆரம்பம்

### ஒருநாள் சேவை இடம்பெறாது

தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த விமான கடவுச்சீட்டு விநியோகம், சாதாரண சேவையின் கீழ் இன்று முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. ஒருநாள் சேவை இடம்பெறாது என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தன்னுடைய சேமிப்பு பணத்தை மக்களுக்கு வழங்கிய இந்திய சிறுமி

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை நகர் மன்ற உறுப்பினர் சஹானாஸ் ஆபிதாவின் தங்கை பையினாவின் மகள் பில்சா சாரா பள்ளி மாணவியான இவர் தனது சேமிப்பு பணமான 4,400 ரூபாவை இலங்கை மக்களுக்காக கையளித்துள்ளார்.

இலங்கை மக்களுக்காக ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சங்கர் லால் குவமத்திடம் தனது சேமிப்பு பணமான 4,400 ரூபாவை சனிக்கிழமை அவர் கையளித்துள்ளார் .

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் வசிக்கும் மக்கள் உணவின்றி தவித்து வருவதோடு, பல்வேறு பொருளாதார நெருக்கடிகளையும் சந்தித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## பலாப்பழம் பறிக்க மரத்தில் ஏறிய முதியவர் தவறி விழுந்து உயிரிழப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கணுக்கேணி கிழக்கு பகுதியில் வீட்டு காணியில் இருந்த பலாமரத்தில் பலாப்பழம் பறிக்க மரத்தில் ஏறிய முதியவர் தவறி விழுந்து மரணமான சம்பவம் கணுக்கேணி கிழக்குப் பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று மாலை மரத்தில் பழுத்திருந்த பலாப்பழத்தை வெட்டுவதற்காக ஏறிய கணுக்கேணி கிழக்கு முள்ளியவளை பகுதியில் வசித்து வந்த 72 வயதுடைய தம்பாப்பிள்ளை கனகராசா என்பவரே தவறி விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இருவாள்களுடன் தந்தை, மகன் வல்வெட்டித்துறையில் கைதாகினர்

வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து இரு வாள்கள் மீட்கப்பட்டுள்ளதோடு, தந்தை மற்றும் மகன் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி வீட்டில் கணவர் தகராறில் ஈடுபடுகின்றார் என்று மனைவியால் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய வீட்டுக்கு பொலிஸார் சென்றபோதே இரு வாள்களும் மீட்கப்பட்டன. அதையடுத்து தந்தை மற்றும் மகன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# உக்ரைன் இரும்பு ஆலையில் சிக்கித் தவித்த மக்கள் மீட்பு



## ரஷ்ய போர்க்கப்பல் மீது தாக்குதல்

மரியுபோலில் ரஷ்ய படை முற்று கையிட்டுள்ள இரும்பு ஆலையில் பதுங்கிஇருந்தபெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட பொதுமக்கள் அனைவரும் மீட்கப்பட்டுள்ளனர் என்று உக்ரைன் தெரிவித்துள்ளது. ரஷ்யாவின் தாக்குதலில் உக்ரைனின் மரியுபோல் நகர் உருக்குலைந்து உள்ளது. சில நாள்களுக்கு முன் அந்த நகரை முழுமையாக கைப்பற்றி விட்டதாக ரஷ்ய ராணுவம் அறிவித்தது. ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வந்ததால் அசோவ்ஸ்டல் இரும்பு ஆலையில் உக்ரைன் வீரர்களும், ஏராளமான பொதுமக்களும் தஞ்சம் அடைந்தனர். சரண் அடைய ரஷ்யா விடுத்த உத்தரவை உக்ரைன் வீரர்கள் ஏற்க மறுத்தனர். உக்ரைன் வீரர்களும்,பொதுமக்களும் சுரங்கங்களில்தங்கி இருந்தனர்.

அசோவ்ஸ்டல் இரும்பு ஆலையில் சிக்கி இருந்த பொதுமக்களை பாதுகாப்பாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ரஷ்யாவுக்கு உலக நாடுகள் கோரிக்கை விடுத்தன.

இதையடுத்து ஐ.நா., செஞ்சிலுவை சங்கத்துடன் இணைந்து ஆலையில் இருந்த பொதுமக்களை மீட்கும் பணி தொடங்கியது. இரும்பு ஆலையின் சுரங்கங்கள், பதுங்கு குழிகளில் சுமார் 200 பேர் இருந்தனர். இந்நிலையில், இரும்பு ஆலையில் இருந்த பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என அனைவரும் வெளியேற்றப்பட்டு உள்ளனர் என்று உக்ரைன் தெரிவித்துள்ளது.

ரஷ்யா உக்ரைன் இடையிலான போர் 70 நாள்களுக்கு மேல் தொடர்ந்து வரும் நிலையில், உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் ரஷ்ய ராணுவம் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. உக்ரைன் ராணுவமும் ரஷ்யாவுக்கு தக்க பதிலடி கொடுக்கும் வகையில் எதிர் தாக்குதல் நடத்தி வருகிறது. ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள பாம்பு தீவில் உக்ரைன் ராணுவம் டிரோன் தாக்குதல்நடத்தியது. இதில், ரஷ்யாவின் மிகப் பெரிய போர் கப்பலான 'மாக்ராவ்' அழிக்கப்பட்டதாக உக்ரைன் ராணுவம் தெரிவித்துள்ளது. கடந்த பெப்ரவரி 10ம் திகதி கருங்கடலில் நிறுத்தப்பட்டிருந்த 'மாஸ்கோவ்' போர்க்கப்பலை டிரோன் தாக்குதல் மூலம் உக்ரைன் அழித்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந் நிலையில், ஒடேசா அருகே கருங்கடலில் இருந்த உக்ரைனின் 2 மிகப் பெரிய போர்க்கப்பல்களை குண்டுவீசி அழித்து விட்டதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

### பள்ளி மீது குண்டுவீச்சு

கிழக்கு உக்ரைனின் லுகான்ஸ் பகுதியில் பிலோகோரிவ்கா என்ற கிராமத்தில் உள்ள பள்ளியில் 100க்கும் மேற்பட்ட மக்கள் அடைக்கலம் அடைந்திருந்தனர். இதன் மீது ரஷ்ய ராணுவம் நேற்று நடத்திய வான்வழி தாக்குதலில், பள்ளிக் கட்டடம் முழுவதுமாக சேதமானது. இதில், அங்கு தங்கியிருந்த 12க்கும் மேற்பட்டோர் பலியாகினர். மற்றவர்கள் படுகாயத்துடன் மீட்கப்பட்டுள்ளனர்.

### அமெரிக்க அதிபர் மனைவி உக்ரைனுக்கு திடீர் பயணம்

ரஷ்யாவுடன் 2 மாதங்களுக்கு மேலாக போரிட்டு வரும் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை, பல்வேறு நாட்டு தலைவர்கள் நேரில் சென்று சந்தித்து ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், யாரும் எதிர்பாராத விதமாக, அமெரிக்க அதிபர் பைடனின் மனைவி ஜில் பைடன் நேற்று திடீரென உக்ரைன் சென்றார். மேற்கு உக்ரைனில் உள்ள சிறிய கிராமத்தில், ஜெலன்ஸ்கியின் மனைவி ஒலினாவை சந்தித்து, அன்னையர் தின வாழ்த்து தெரிவித்தார். போரில் ஈடுபட்டுள்ள உக்ரைன் ராணுவத்துக்கும் தனது ஆதரவை அவர் தெரிவித்தார் என வெள்ளை மாளிகை கூறியுள்ளது.

### 'டூம்ஸ்டே' அச்சுறுத்தல்

இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனியின் நாசிப்படையை வென்றதின் அடையாளமாக, ஒவ்வொரு ஆண்டும் மே 9ம் தேதியை ரஷ்ய ராணுவம் வெற்றி தினமாக கொண்டாடி வருகிறது. தற்போது, உக்ரைன் போர் தீவிரமாக நடந்து வரும் நிலையில், இன்று இந்த வெற்றி தினம் கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு நடக்கும் ராணுவ அணிவகுப்பில் ரஷ்யாவின் ராணுவ பலத்தை பிரகடனப்படுத்தும் வகையில், இதுவரையில் வெளியில் காட்டப்படாத பயங்கர அணு ஏவுகணைகள் இடம் பெற உள்ளன. உக்ரைனுக்கு ஆயுத, பொருள் உதவி அளித்தும், ரஷ்யாவின் மீது பொருளாதார தடைகளை விதித்தும் வரும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளை மிரட்டும் வகையில் இந்த அணிவகுப்பு நடக்கிறது. இந்நிலையில், அணு குண்டுகளை வீசுவதற்காகவே ரஷ்யா வைத்துள்ள பிரமாண்ட விமானமான 'டூம்ஸ்டே', 12 ஆண்டுகளுக்குப் பிறகு மாஸ்கோவின் மீது நேற்று முன்தினம் பறந்தது. இது, அமெரிக்கா, நேட்டோ நாடுகளுக்கு ரஷ்யா விடுத்த அணு ஆயுத தாக்குதல் எச்சரிக்கையாக கருதப்படுகிறது.

---

ரகசிய வாக்கெடுப்பில் 1,416 வாக்குகள் பெற்று

# ஹொங்கொங் புதிய தலைமை நிர்வாகியாக ஜான் லீ தேர்வு



ஹொங்கொங்கில் புதிய தலைமை நிர்வாகி தேர்வுக்கு நடந்த ரகசிய வாக்கெடுப்பில் 1,416 வாக்குகள் பெற்று முன்னாள் பாதுகாப்பு அதிகாரியான ஜான் லீ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்துவிடுபட்ட ஹொங்கொங் 1997ம் ஆண்டு சீனா வசம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர், சீனாவுக்கு விசுவாசமாக இருப்பவரே மறைமுகமாக ஹொங்கொங் தலைமை நிர்வாகியாக தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார். இதன் புதிய நிர்வாகியை தேர்வு செய்வதற்கான ரகசிய வாக்கெடுப்பு தேர்தல் நேற்று நடந்தது. இதில், சீனாவால் நிறுத்தப்பட்ட ஜான் லீ வெற்றி பெற்றார்.

மொத்தமுள்ள 1,500 பிரதிநிதிகள் வாக்குகளில், வெற்றி பெறுவதற்கு 751 வாக்குகளே போதுமானது. ஆனால், 1,416 வாக்குகளை பெற்று ஜான் லீ வெற்றி பெற்றார். இவர் ஜூலை 1ம்திகதிபொறுப்பேற்கஉள்ளார்.

# சவுதி மன்னர் வைத்தியசாலையில் அனுமதி



சவுதி அரேபியாவின் மன்னர் சல்மான் பின் அப்துல்அஜிஸ் (86), திடீர் உடல்நலக் குறைவால் செங்கடல் நகரமான ஜெட்டாவில் உள்ள மருத்துவமனையில் மருத்துவப் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என, அந்நாட்டு சவுதி பத்திரிகை நிறுவனம் தெரிவித்துள்ளது. சிறப்பு மருத்துவமனையில்மருத்துவப்பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகிறார் என்று மட்டுமே அந்த செய்தி நிறுவனத்தில் கூறப்பட்டுள்ளது.

மற்ற விவரங்கள் எதுவும் தெரிவிக்கவில்லை. முன்னதாக கடந்த 2020ம் ஆண்டில் மன்னர் சல்மான் பின் அப்துல்அஜிஸ், பித்தப்பை அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். கடந்த மார்ச் மாதத்தில் அவருக்கு இதயம் தொடர்பான சிகிச்சையும் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# துரோகிகளை வீழ்த்தி புதிய பாகிஸ்தான் அமைய தொடர்ந்து பணியாற்றுவேன் என்கின்றார் இம்ரான்



அமெரிக்க ராணுவ முகாம்களை பாகிஸ்தானில் அனுமதிக்க மறுத்ததே தான் பிரதமர் பதவியை இழக்க முக்கிய காரணம் என இம்ரான் கான் தெரிவித்துள்ளார். பெரும்பான்மை பலத்தை இழந்ததால் அண்மையில் ஆட்சியை பறிகொடுத்த அவர் அமெரிக்கா மீது தொடர்ந்து குற்றச்சாட்டுகளை கூறிவருகிறார்.

இம்ரான் கான் வெளியிட்டுள்ள வீடியோ செய்தியில் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறிய அமெரிக்கா பாகிஸ்தானில் முகாம்களை அமைத்து அந்நாட்டின் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டதாக கூறியுள்ளார். இதற்கு தான் அனுமதிக்க மறுத்தேன் என அவர் கூறியுள்ளார். தீவிரவாதத்திற்கு எதிராக அமெரிக்கா நடத்திய போரில் சிக்கி பாகிஸ்தானில் மட் டும் 80 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என இம்ரான் கான் கூறியுள்ளார்.

சீனாவுடன் நல்லுறவு மற்றும் ரஷ்யாவிற்கு தான் மேற்கொண்ட பயணம் போன்றவை அமெரிக்காவை கோபமடைய செய்ததாக அவர் தெரிவித்துள்ளார். துரோகிகளை வீழ்த்தி புதிய பாகிஸ்தான் அமைய தொடர்ந்து பணியாற்றுவேன் என்று இம்ரான் கான் உறுதியளித்துள்ளார். வரும் 20ஆம் திகதி பாகிஸ்தானில் பிரமாண்ட பேரணி நடத்த முடிவு முடிவு செய்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

# இலங்கைக்கு அனுப்பும் அரிசி பற்றி வதந்தி பரப்பினால் நடவடிக்கை: அமைச்சர் எச்சரிக்கை



தமிழக உணவுப்பொருள்கள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாகக் கடுமையான துன்பத்திலிருக்கும் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முடிவெடுத்து ஒன்றிய அரசின் அனுமதியைக் கோரியிருந்தார். அனுமதி கிடைத்தவுடன் 40 ஆயிரம் டொன் அரிசி உள்ளிட்ட பொருள்களை அனுப்பிடும் நடவடிக்கையைத் துரிதப் படுத்தினார்.

அதன்படி, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி இறுதிப்படுத்திட தாமதமாகும் நிலையில் உடனடியாக நிவாரணப் பொருள்கள் வழங்குவதற்காக வெளிப்படைத் தன்மையுடன் அரிசி ஆலை அதிபர்களின் சங்கங்களை அழைத்துப் பேசி, குறுகியகாலத்தில் உற்பத்தி செய்ய முடிந்த 51 ஆலைகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு விநியோக ஆணைகள் வழங்கப்படுகின்றன. இந்த நிலையில் சில விமிகள் வழக்கமாக விசத்தைக் கக்கும் விதமாக இந்திய உணவுக் கழகத்திடமிருந்து கிலோ ஒன்றிற்கு 20 ரூபாய்க்கு வாங் காமல் அதிகமாகக் கொடுத்து வாங்கி விட்டது போல் சமூக ஊடகங்களில் எழுதுகின்றனர். இது தவறான பொய்ப் பிரசாரமாகும்.

ஒன்றிய அரசின் உணவு மானியத்தால் விலை குறைக்கப்பட்டு, 20 ரூபாய் விலையில் இந்திய உணவுக் கழகம் வழங்கக்கூடிய கூடிய அரிசியானது, நமது நாட்டில் பொது விநியோகத் திட்டத்தில் மாநில அரசுகள் விநியோகிப்பதற்கும் மாநில அரசின் திட்டங்களுக்கும் மானிய விலையில் வழங்கப்படும் அரிசி ஆகும். இதனை மாநில அரசுகள் வெளிநாடுகளுக்கு அனுப்ப இயலாது.

இதனால்தான் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக அரிசி கொள்முதல் செய்யப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்படுகிறது. எனவே இந்த இந்திய உணவுக் கழக அரிசியை, இலங்கைக்கு அனுப்புவதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் கொள்முதல் ஆணை வழங்கியுள்ள உயர்ரக அரிசியோடு ஒப்பிடுவது முற்றிலும் தவறானது.

இந்த உண்மைகள் முழுமையாகத் தெரிந்திருந்தும் அவதூறு செய்ய வேண்டும் என்பதற்காகவே சிலர் இந்தப் பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளனர். இவ்வாறு அவதூறு பரப்புவோர் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது, என்று தெரிவித்துள்ளார்

## தமிழகத்தில் மின்தடைக்கு நிர்வாகச் சீர்கேடுதான் காரணம்

### மத்திய இணையமைச்சர் எல்.முருகன் பேட்டி



கன்னியாகுமரி மாவட்டம் தென்தாமரைக் குளத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த மத்திய இணையமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டுக்கு முன்புவரை காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் இலங்கைக் கடற்படையால் தினந்தோறும் மீனவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். கிட்டத்தட்ட 600 க்கும் மேற்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நடந்துள்ளது.

2014 ஆம் ஆண்டுக்குப் பின்பு பிரதமர் மோடியின் தலையீட்டால் ஒரு துப்பாக்கிச்சூடு சம்பவம் கூட நடைபெறவில்லை. அந்த வகையில் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு நம்முடைய மீனவர்களுக்கு ஒரு மிகப்பெரிய பாதுகாப்பை உறுதி செய்திருக்கிறது.

மேலும் 2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியாவில் மின்தடை என்பதே இல்லாமல் இந்தியா ஒரு மின் மிகை நாடாக மாறியிருக்கிறது. தமிழகத்தில் மின்தடை ஏற்படுவதற்கு நிர்வாகச் சீர்கேடு தான் காரணம், என்று எல். முருகன் தெரிவித்துள்ளார்.

## கேரளாவில் பரவும் தக்காளிக் காய்ச்சல்;

## மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லையென சுகாதாரத்துறை செயலாளர் பேட்டி





கேரளாவில் பரவி வரும் தக்காளிக் காய்ச்சலுக்கு 85 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை குறி வைத்து தாக்கும் இந்த காய்ச்சல் பாதிப்பு காரணமாக சருமத்தில் சிவப்பு திட்டுக்கள் ஏற்படுவதால் இது தக்காளி காய்ச்சல் என அழைக்கப்படுகிறது.

அதிக பாதிப்பு காரணமாக கொல்லம் மாவட்டத்தில் அங்கன்வாடி மையங்கள் மூடப்பட்டுள்ளன. கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், சேலத்தில் ஊடகவியலாளர்களுக்குப் பேட்டி அளித்த தமிழக சுகாதாரத்துறைச் செயலாளர் ராதாகிருஷ்ணன், தமிழகத்தில் தக்காளிக் காய்ச்சல் வைரஸ் பற்றி அச்சப்படத் தேவையில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

அது சாதாரண வைரஸ்தான், தக்காளிக்கும் இந்த வைரசுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தண்ணீரில் உற்பத்தியாகும் கொசுக்கள் மூலம் இது பரவ வாய்ப்பு உள்ளது, தமிழகத்தில் கொசுக்களை ஒழிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் தக்காளி வைரஸ் குறித்து பொதுமக்கள் யாரும் அச்சப்படத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## இரத்த உறவுத் திருமணங்களில் தமிழகம் முதலிடம்; ஆய்வில் தகவல்



இரத்த உறவு முறை கொண்ட ஆணும் பெண்ணும் திருமணம் செய்யும்போது அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு பிறப்பு குறைப்பாடு, இரத்தச் சோகை அல்லது மரபணுப் பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனாலும் தென் மாநிலங்களில் இரத்த உறவுத் திருமணங்கள்தான் அதிகளவில் நடந்து வருகின்றன. இந்த இரத்த உறவுத் திருமணங்களில் கர்நாடகம் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. கர்நாடகத்தில் 27 சதவீத மக்கள் இரத்த உறவில் திருமணம் செய்து கொள்வது தேசிய குடும்ப சுகாதார அமைப்பு நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

கர்நாடகத்தில் 9.6 சதவீதப் பெண்கள் தந்தை வழி இரத்த உறவிலும், 13.9 சதவீத பெண்கள் தாய் வழி இரத்த உறவிலும் திருமணம் செய்து கொள்கின்றனர். இந்த இரத்த உறவுத்திருமணங்கள் மூலம் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு சில பிரச்சினைகள் ஏற்பட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது. இதனைத் தடுக்க இரத்த உறவு முறைத் திருமணங்களைத் தவிர்க்க வேண்டும் என்றும் டாக்டர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

தென்மாநிலங்களில் இரத்த உறவுத் திருமணங்களில் தமிழகம் முதல் இடத்தில் உள்ளது. அதாவது அங்கு 28 சதவீதம் இரத்த உறவுத் திருமணங்கள் நடக்கின்றன. ஆந்திராவில் 26 சதவீதமும், புதுச்சேரியில் 19 சதவீதமும், தெலுங்கானாவில் 18 சதவீதமும் இரத்த உறவுத். திருமணங்கள் நடப்பதாக தரவுகள் கூறுகின்றன.

# திருகோணமலையில் நேற்றிரவு தீப்பந்தங்களுடன் ஆர்ப்பாட்டம்




(அப்துல்சலாம் யாசீம்)

நாட்டில் ஜனாதிபதியினால் அமல்படுத்தப்பட்ட அவசரகால சட்டத்திட்கு எதிர்ப்பு தெரிவித்து திருகோணமலையில் நேற்றிரவு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. திருகோணமலை பிரதான கடற் கரைக்கு முன்பாக அமைந்துள்ள காந்தி சுற்று வட்டத்திற்கு முன்பாக தீப்பந்தம் ஏந்தியவாறு இந்த ஆர்ப்பாட்டம் ஜே.வி. பியையும் உள்ளடக்கிய தேசிய மக் கள் முன்னணியினால் முன்னெடுக் கப்பட்டது.

'அவசரகால சட்டத்தை உடன் நீக்கு! ஒடுக்குமுறையை உடன் நிறுத்து!!' – எனும் தொனிப்பொருளில் தீப்பந்தம் ஏற்றியவாறு அரசுக்கு எதிராகக் கோஷங்கள் எழுப்பி எதிர்ப்பு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது. இதன்போது கருத்து தெரிவித்த தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருண் ஹேமச்சந்திர –

அரசாங்கம்மக்களின்கருத்துகளுக்கு செவிமடுக்காமல் போலி நாடகங்கள் நடித்து, தலைகளையும், கதிரைகளையும் மாற்றித் தமது ஆட்சிப் பீடத்தைத் தக்க வைத்துக் கொள்ள முயல்கிறது. இது மக்களை ஏமாற்றும் செயல். இவ்வாறு மக்களின் கண்களை கட்டி அரசாங்கத்தை தக்கவைக்கும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாமெனவும், மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து அரசும் ஜனாதிபதியும் உடன் பதவி விலக வேண்டும் எனவும், நாட்டில் அமல்படுத்தப்பட்டுள்ள அவசரகால சட்டத்தை உடன் நீக்க வேண்டும் எனவும் கோருகின்றோம்.– என்றார்.

## கல்முனை புதிய பஸ் நிலைய நிலத்தின் ஒரு பகுதிக்கு உரிமை கொண்டாடியவர்

பாறுக் ஷிஹான்)

கல்முனை புதிய பஸ் நிலையத்தின் ஒரு பகுதியை சட்டவிரோதமாக உரிமை கொண்டாடிய நபர் ஒருவருக்கெதிராக கல்முனை பொலிஸ் நிலையத்தில் கல்முனை மாநகர சபையினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குக்கு அருகாமையில் புதிதாக புணர்நிர்மானம் செய்யப்பட்டு மக்களிடம் அண்மையில் கையளிக்கப்பட்ட பஸ் நிலையத்தின் ஒரு பகுதியை தனக்குச் சொந்தமானது என கூறி தனிநபர் ஒருவர் கட்டுமானம் ஒன்றினை மேற்கொள்ளத் தயாராகியுள்ளார்.

இதனை அறிந்த கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் சம்பவ இடத்திற்குசென்றுஅந்நபருடன்கலந்துரையாடிய பின்னர் கல்முனை பொலிஸ் நிலையத்தில் சம்பந்தப்பட்ட நபருக்கு எதிராக முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த முதல்வர்–

கல்முனை புதிய பஸ் நிலையம் அரசாங்கத்தின் காணியாகும். இக்காணியில் தனிநபர் உறுதி ஒன்றைக் கொண்டு வந்து தனக்கு இவ்விடத்தில் உரித்து உள்ளதாகக் குறிப்பிட்டு கட்டுமானம் ஒன்றை நிர்மாணிக்க அடித்தளம் அமைக்க முற்பட்டுள்ளார். தற்போது அந்தச்செயற்பாட்டைத் தடுத்து நிறுத்தி, அவருக்கு எதிராகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளோம். சட்டம் அதன் கடமையினை செய்யும் என நம்புகின்றேன்.– என்றார்.




அண்மைக்காலமாக கல்முனை மாநகர சபைக்குட்பட்ட அரச காணிகளில் தனிநபர்கள் சிலர் சட்டவிரோதமாக கட்டடங்கள் அமைக்க முயற்சிப்பதும் மாநகர சபை அதனைத் தடுப்பதும் வழமையான சம்பவமாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி நபரினால் அவ்விடத்திற்குக் கொண்டுவரப்பட்ட கற்கள், மண் உள்ளிட்ட பொருள்கள் மாநகரசபையினால் எடுத்து செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கஞ்சா விற்பனையில் ஈடுபட்டவர் மட்டக்களப்பு எருவிலில் கைது




(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு எருவில் பிரதேசத்தில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என மட்டக்களப்பு குற்றத்தடுப்புப் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே மேற்படி நபர் கைதானார்.

அவரிடமிருந்து 400 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## மட்டக்களப்பு புளியடிக்குடாவில் புனித செபஸ்தியார் பெருவிழா

(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு புளியடிக்குடா புனித செபஸ்தியார் பேராலய 104 ஆவது வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) மாலை 5.15 மணிக்கு பங்குத் தந்தை அருட்பணி அனிஸ்டன் மொறாயஸ்அடிகளாரின்தலைமையில் திருச்செபமாலையினைத் தொடர்ந்து கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து நவநாட்களில் தினமும் 5.30 மணிக்கு திருச்செபமாலை, பிரார்த்தனை மற்றும் நவநாள் திருப்பலி ஆகியன இடம்பெறவுள்ளன.

அத்தோடு 21 ஆம் திகதி (சனிக்கிழமை) காலை 7.00 மணிக்கு முதல் நன்மை மற்றும் உறுதிப்பூசுதல், அருட்சாதனம் வழங்கும் திருப்பலி மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசெப் பொன்னையா ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. அன்றைய தினம் மாலை 5.15 மணிக்கு திருச்சொரூபப் பவனி வழமையான வீதிகளூடாக பயணிக்கவுள்ளது.

எதிர்வரும் 22 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) காலை 5.30 மணிக்கு முதலாம் திருப்பலியும், காலை 7.00 மணிக்கு பெருவிழாக் கூட்டுத் திருப்பலியும் இடம்பெற்று, இறுதி ஆசிருடன் கொடியிறக்கப்படும்.

நவநாட் காலங்களில் அருட் தந்தையர்களான அருட்பணி ரீ.சகாயநாதன், றொசான் சுவைக்கீன், லெபோன் சுதன், ஏ.தேவதாசன், ஏ.ஜென்சன் லொயிட், எஸ்.ஜே.சுலக்ஷ்ன், சீ.வி.அன்னதாஸ், எஸ்.ஜோசெப் அற்புதராஜ் மற்றும் அருட் தந்தை நிர்மல் சூசைராஜ் ஆகியோரால் சிறப்பு அருளுரைகளுடன், திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளன.

## தமிழ்ப் பதாகைகள் ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் பிக்குகள்

மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை மட்டக்களப்பில் நேற்று முன்னெடுத்திருந்தனர்.

செங்கலடி சந்திவரை பேரணியாகச் சென்று அங்கு கோட்டா கோ ஹோம் கமவை அமைத்து, அவர்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

அரசாங்கத்தை விரட்டியடிப்போம் எனும் தொனிப் பொருளில் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள், உணவு இல்லை, பால்மா இல்லை, எரிபொருள் இல்லை, மின்சாரம் இல்லை, கொள்ளைக்கார பொருளாதார முறைமைக்கு எதிராக தொடர்ந்து போராடுவோம், மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு கொடு, அடிக்காதே! அடிக்காதே! விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதே உள்ளிட்ட கோங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்த பௌத்த தேரர்களில் பலரும், தமிழ் மொழில் எழுதப்பட்டிருந்த பதாகைகளை ஏந்தியிருந்தமை விசேட அம்சமாகும்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# பழுதடைந்த அரிசியை விநியோகிக்கத் திட்டம்

## மீள்சுழற்சியின் பின்னர்



வர்த்தக அமைச்சால் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்து வெயன்கொட தனியார் களஞ்சியசாலை ஒன்றில் வைக்கப்பட்டுள்ள 11ஆயிரம் தொன் அரிசி பாவனைக்கு உதவாத வகையில் பழுதடைந்துள்ளது. அதனை மீள் சுழற்சி செய்து நுகர்வோருக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதுதொடர்பாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை தலையிட்டுநடவடிக்கைஎடுக்கவேண்டும் என நுகர்வோர் அதிகாரசபையின் முன்னாள் பணிப்பாளர் துஷான் குணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கை மனிதநேய கட்சி கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டில் அரிசி விலையை கட்டுப்படுத்த நடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன வர்த்தக அமைச்சராக இருந்து கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மியன்மாரில் இருந்து அரிசி இறக்குமதி செய்திருந்தார்.

வர்த்தக அமைச்சால் இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட 11ஆயிரம் தொன் அரிசி வெயன்கொட பிரதேசத்தில் தனியார் களஞ்சியசாலை ஒன்றில் வைக்கப்பட்டுள்ளது. தற்போது அந்த அரிசி நுகர்வோருக்கு பாவனைக்கு எடுக்க முடியாதளவுக்கு பழுதடைந்துள்ளது.

என்றாலும் குறித்த அரிசி தொகையை தற்போது வெளியில் கொண்டுவந்து அதனை சுத்தப்படுத்தும் நடவடிக்கை இடம்பெறுவதாகவும் அதனை நுகர்வோருக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது. அதனால் இதுதொடர்பாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை தலையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன் நாட்டில் அரிசியின் விலை பாரியளவில் அதிகரித்துள்ள நிலையில் இந்தளவு பாரியதொரு தொகை அரிசியை எந்தவித பொறுப்பும் இல்லாமல் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அதேபோன்று மியன்மாரில் இருந்து கொண்டுவரப்பட்ட இந்த அரிசி கப்பலை துறைமுகத்தில் இருந்து உரிய காலத்தில் வெளியேற்றுவதற்கு முடியாமல் போனதால் அதற்காக 35 லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கி இருக்கின்றது.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியில் இருக்கும் நிலையிலும் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் பொறுப்பில்லால் செயற்பட்டு வருகின்றனர்.

மேலும் இன்று அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு பொறுப்புக்கூற யாரும் இல்லை. எடுக்கப்படும் தீர்மானங்கள் பிழைத்தால் அதற்கு மன்னிப்புக் கேட்டுவிட்டு செல்கின்றனர். நிதி அமைச்சர் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட சில பிழையான தீர்மானங்களை ஏற்றுக்கொண்டு அதற்காக மன்னிப்பு கோரி இருந்தார். மன்னிப்பு கோருவதன் மூலம் இதனை விட்டுவிடமுடியுமா? இதற்கு காரணமானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அதேபோன்று வர்த்தக அமைச்சால் இயற்கை உரம் உற்பத்தி செய்ய 3 கோடி ரூபா செலவழித்து கொழும்பில் கட்டடம் ஒன்று கட்டப்பட்டிருக்கின்றது. நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையில் இவ்வாறானதொரு வேலைத்திட்டம் தற்போது தேவையா எனக் கேட்கின்றோம். அத்துடன் வேலைத்திட்டம் தோல்வியடைந்தால், தவறுதலாக எடுக்கப்பட்ட தீர்மானம் எனத் தெரிவித்து அதிகாரிகள் இதில் இருந்து ஒதுங்கிக்கொள்வார்கள். ஏனெனில் பொறுப்புக்கூற யாரும் இல்லை.

மேலும் அரசாங்கம் இன்னும் தங்களுக்கு அதிகாரம் இருப்பதாகவே நினைத்துக்கொண்டிருக்கின்றது. அவசரகால சட்டத்தை கொண்டுவந்து அரசாங்கத்துக்கு எதிராகப் போராடும் மக்களை கட்டுப்படுத்தலாம் என்றே அரசாங்கம் நினைத்துக்கொண்டிருக்கின்றது. அவசரகால சட்டம்தான் அரசாங்கத்தின் இறுதி துரும்பாகும். அவசரகால சட்டத்தை அமுல்படுத்தியிருப்பதால் சர்வதேச ரீதியில் பாரிய தலைகுனிவை அரசாங்கம் ஏற்படுத்தி இருக்கின்றது. இதனால் சர்வதேசத்தின் உதவிகள் தடைப்படும் அபாயம் இருக்கின்றது. – என்றார்.

# அவசரகால சட்டம் தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டாம்

## சிரேஷ்ட சட்டத்தரணி கிறிஸ்மால் வர்ணசூரிய கருத்து

மக்களின் அமைதியான போராட்டத்தை அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தி கட்டுப்படுத்த முடியாது. அதனால் அவசரகாலச் சட்டம் தொடர்பில் மக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை.

அத்துடன் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தினாலும் அதன் விதிமுறைகள் இன்னும் வர்த்தமானி படுத்தப்படவில்லை என சிரேஷ்ட சட்டத்தரணி கிறிஸ்மால் வர்ணசூரிய தெரிவித்தார்.

இலங்கை மனிதநேய கட்சி ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்–

அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரம் அரசமைப்பில் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. அதன் பிரகாரம் அவசரகால சட்டத்தை அமுல்படுத்துவதற்கான தனது விருப்பத்தை ஜனாதிபதி தற்போது தெரிவித்துள்ளார். ஆனால் அவரசரகால சட்டம் அமுல்படுத்தப்பட்டால், எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளக்கூடாது என விதிமுறைகளைத் தெரிவித்து, வர்த்தமானி அறிவிப்பு செய்யப்படவேண்டும்.

அவ்வாறான விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானி அறிவிப்பு இதுவரை வெளிவரவில்லை அதனால் தற்போது பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது.

அத்துடன் அவசரகால சட்டம் என்பது எமது நாட்டு சட்டத்தின் கீழே இருக்கின்றது. அமைதியான முறையில், சொத்துகளுக்கு சேதத்தை ஏற்படுத்தாமல் மேற்கொள்ளப்படும் போராட்டங்களை இந்த சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்த முடியாது. அவ்வாறு ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொண்டால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.

அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்பவர்களை அச்சுறுத்தவே தற்போது அவசரகால சட்டம் பிரகடனப்படுத்தி இருக்கின்றது. இது மக்களை அடக்குவதற்கு அரசாங்கம் கையில் எடுத்திருக்கும் இறுதித் துரும்பாகும்.

மேலும் நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமைக்கு தீர்வுகாண இடைக்கால அரசாங்கம் அமைப்பது தொடர்பாகப் பலரும் கதைத்து வருகின்றனர். இடைக்கால அரசாங்கம் என்று எதுவும் அரசமைப்பில் இல்லை. மாறாக தேசிய அரசாங்கம் அமைக்க முடியும். நாடாளுமன்றத்தில் இருக்கும் பல கட்சிகள் இணைந்து, தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வுகாணக் குறிப்பிட்ட காலத்துக்கு தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு அரசமைப்பில் இடமிருக்கின்றது.

அத்துடன் காலிமுகத்திடலில் போராட்டத்தில் இருப்பவர்கள், ஜனாதிபதி, பிரதமர் பதவி விலகவேண்டும் எனத் தெரிவிக்கின்றனர். அரசமைப்பின் 49/1 இன் கீழ் பிரதமர் பதவி விலகினால் அரசாங்கம் பதவி விலகும். அதேபோல் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றின் மூலம் அரசாங்கத்தை பதவி விலக்க முடியும்.

ஆனால் ஜனாதிபதியை அவ்வாறு பதவி விலக்க முடியாது. அரசமைப்பில் அதற்கான விதிமுறைகள் மிகவும் கடினமாகும். அதனால் மக்களின் போராட்டத்தை பயன்டுத்தி தற்போது இருக்கும் முறைமையை மாற்றியமைத்துக்கொள்ள முயற்சிக்கவேண்டும். குறிப்பாக ஜனாதிபதி முற்றாக நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற வேண்டும். –என்றார்.

# கடுவலை நீதிவான் பாதுகாப்பு நீக்கப்பட்டமை: பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடை நிறுத்தம்

கடுவலை நீதிவான் சானிமா விஜேபண்டாரவின் பாதுகாப்பு திடீரென நீக்கப்பட்டதாக செய்திகள் வெளியானதையடுத்து, நீதிவானின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

கடமையை சரிவர நிறைவேற்றத் தவறியமைக்காக இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அத்துடன் மேற்படி நீதிவானின் இல்லத்தின் பாதுகாப்புக்குப் பொறுப்பான தலங்கம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக, மோசமான மேற்பார்வை தொடர்பில் பொலிஸ் விசேட விசாரணைப் பிரிவூடாக சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். கடந்த 5 ஆம் திகதியும், 6 ஆம் திகதியும் நாடாளுமன்றை அண்மித்து இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு தடை விதிக்குமாறு தலங்கமை பொலிஸார் கடுவலை நீதிவானிடம் கடந்த 4 ஆம் கோரியிருந்த நிலையில், அவர் அந்தக் கோரிக்கையை நிராகரித்திருந்தார்.

அத்துடன் 5 ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தை அடுத்து கைது செய்யப்பட்ட 13 பேரை சொந்த பிணையில் செல்லவும் நீதிவான் அனுமதித்திருந்தார். இவ்வாறான பின்னணியிலேயே கடந்த 6 ஆம் திகதி அவரது வீட்டின் பாதுகாப்பு திடீரென அகற்றப்பட்டதாக அறிய முடிகிறது.

இந் நிலையில் கடுவலை நீதிவான் சானிமா விஜேபண்டாரவின் உத்தியோகபூர்வ இல்ல வளாகத்தை, தலங்கம பொலிஸ் பொறுப்பதிகாரி கடந்த 6 ஆம் திகதி தனிப்பட்ட ரீதியில் சோதனை செய்த பின்னர் வீட்டின் பாதுகாப்பை அகற்றியுள்ளதாக, நீதிவான்கள் மற்றும் மாவட்ட நீதிபதிகளை கொண்ட நீதிச் சேவை சங்கம் பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் ஊடாக அறிவித்து, தலங்கமை பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக நடவடிக்கை கோரியிருந்தது..

குறித்த சங்கத்தின் தலைவரான நுகேகொடை நீதிவான் பிரசன்ன அல்விஸ், செயலாளரான பூகொடை மேலதிக மாவட்ட நீதிபதி பசன் அமரசேன ஆகியோரின் கையெழுத்துடன் இந்த முறைப்பாடு அனுப்பப்பட்டிருந்தது.

நீதிவான்களின் பாதுகாப்பு அந்தந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் நிலையில் அதற்கு பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபம் ஒன்று உள்ளதாகவும், அந்த சுற்று நிருபத்தை மீறி தலங்கம பொலிஸ் பொறுப்பதிகாரி முன்னெடுத்துள்ள நடவடிக்கைக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து இனிமேல் இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறுவதைத் தடுக்குமாறும் நீதிச் சேவை சங்கம் கோரியிருந்தது. இவ்வாறான நடவடிக்கைகள், நீதிமன்றின் சுயாதீனமான நடவடிக்கைகள் மீது நேரடியாக தாக்கம் செலுத்தும் செயற்பாடுகள் என சுட்டிக்காட்டியுள்ள அச்சங்கம், உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் ஊடாக ஏற்பட முடியுமான பாரிய அனர்த்தத்தை தடுக்க பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியுள்ளது.

இந் நிலையில் இது தொடர்பில் மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனிடம் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்ன அறிக்கை கோரியுள்ளார். அந்த அறிக்கை பொலிஸ் மா அதிபருக்கு கிடைத்துள்ள நிலையில், கடுவலை நீதிவான் வீட்டின் பாதுகாப்புக்கு என நிறுத்தப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள், நீதிவான் கடமைகளுக்காக நீதிமன்றம் சென்ற பின்னர், யாருக்கும் அறிவிக்காது அங்கிருந்து வெளியே சென்றுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந் நிலையிலேயே கவனவீனம் தொடர்பில் பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கு அமைய மோசமான மேற்பார்வை தொடர்பில் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்துகள் வடக்கில் இல்லை

## மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அறிவிப்பு

விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்துகளான ஏ.ஆர்.வி. மற்றும் ஏ.ஆர்.எஸ். என்பவை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏ.ஆர்.வி. மருந்துகள் வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் குறிப்பிட்டளவு உள்ள போதும் ஏ.ஆர்.எஸ். தடுப்பூசி மருந்துகள் இல்லை என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நாய்களைக் கண்டால் விலகிச் செல்லுங்கள். நாய்க்கடிக்கு உள்ளாகினால் விலங்கு விசர் நோய் தடுப்பூசி மருந்து தட்டுப்பாட்டினால் உயிர்களைக் காப்பாற்ற முடியாது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

நாய்க்கடிக்கு உள்ளாகியவர்களுக்கு ஏ.ஆர்.பி. மற்றும் ஏ.ஆர்.எஸ். தடுப்பூசி மருந்துகள் வழங்கப்படாவிடின் நீர்வெறுப்பு நோய்க்கு உள்ளாகி உயிரிழப்பு ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.05.2022இல் வெளியிடப்பெற்றது.